


**06. 08. 2025**

தலைப்பு செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் பல்வேறு அமைச்சகங்களை உள்ளடக்கிய கர்த்தவ்ய இல்லத்தை இன்று திறந்துவைத்தார்.

2. ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் 5.5 சதவிகிதமாக நீடிக்கும் என்று வங்கி ஆளுநர் திரு.சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் 20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு இலவச மடி கணினிகள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி **11.19** சதவிகிதமாக அதிகரித்துள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

5. சென்னையில் இன்று தொடங்குவதாக இருந்த கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டிகள் நாளை தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

*********

பிரதமர் - கர்த்தவ்ய பவன்

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் கர்த்தவ்ய பாதையில் அமைந்துள்ள கர்த்தவ்ய இல்லத்தை இன்று திறந்துவைத்துள்ளார்.

இந்த புதிய கட்டிடத்தையும் அதில் உள்ள சிறப்பு அம்சங்களையும் பிரதமர் பார்வையிட்டார்.

நிர்வாக பணிகளையும், ஆட்சி முறையையும் இலகு வாக்கும் வகையில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் உள்ளிட்டவை இந்த இல்லத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வை ஒட்டிய பொது நிகழ்ச்சியில் பிரதமர் இன்றுமாலை உரையாற்றுகிறார்.

*********

பிரதமர் - எம்.எஸ்.சுவாமிநாதன்

இதனிடையே பிரதமர், வேளாண் வளர்ச்சிக்கு வித்திட்ட எம்.எஸ்.சுவாமிநாதன் சர்வதேச நூற்றாண்டு மாநாட்டை நாளை புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்.

எம்.எஸ். சுவாமிநாதனின் ' நினைவு நாணயம் மற்றும் தபால் தலையையும் பிரதமர் வெளியிடுகிறார்.

*********

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகள் இன்றும் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், 1945ஆம் ஆண்டு ஹிரோஷிமா நாகசாகி அணுகுண்டு தாக்குதலில் உயிரிழந்தோரின் நினைவு தினத்தை ஒட்டி உரையாற்றிய அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா அணு ஆயுதங்கள் இல்லா, அமைதியான உலகை படைக்க, அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதனை தொடர்ந்து ஹிரோஷிமா நாகசாகி அணுகுண்டு தாக்குதலில் உயிரிழந்தோருக்கு, உறுப்பினர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து அவைத்தலைவர் கேள்வி நேரத்தை நடத்த முயன்ற போது, பீஹார் வாக்காளர் பிரச்சனையை எழுப்பி, உறுப்பினர்கள் கோஷமிட்டதால் நிலவிய அமளி காரணமாக மக்களவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் முன்னாள் உறுப்பினர் சத்யபால் மாலிக் மறைவிற்கு இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

உத்திரபிரதேச மாநிலத்திலிருந்து இருமுறை மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தியபால், பீஹார், கோவா, ஜம்மு காஷ்மீர் மாநிலங்களின் ஆளுநராகவும் பணியாற்றியதாக அவைத்துணைத்தலைவர் திரு.ஹரிவன்ஷ் எடுத்துரைத்தார்.

அவரது மறைவால் சிறந்த அரசியல்வாதி மற்றும் நாடாளுமன்ற வாதியை, நாடு இழந்துவிட்டதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், பல்வேறு கட்சிகளிடமிருந்து 35 ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸை தாம் பெற்றிருப்பதாகவும், இவை நிராகரிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்து உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

*********

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் தொடர்ந்து 5.5 சதவிகிதமாக நீடிக்கும் என்று வங்கி ஆளுநர் திரு.சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார்.

மும்பையில் இன்று அவர் வெளியிட்ட வங்கியின் இருமாத நிதிக்கொள்கையில் நடப்பாண்டிற்கான உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் அமெரிக்கா விதித்துள்ள வரிகளின் மத்தியிலும் 6.5 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வங்கியின் நிலையான வைப்பு வசதி விகிதம் 5.25 சதவிகிதமாக தற்போது உள்ளதாகவும், குறிப்பிட்டார்.

சர்வதேச நிதி நெருக்கடிகளை கருத்தில் கொண்டு, உள்நாட்டு தேவைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் கவனமான அணுகுமுறையை மேற்கொண்டுள்ள ரிசர்வ் வங்கி வெளிநாட்டு வரி சவால்களையும் எதிர்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

*********

அஜித்தோவல்

இந்தியா – ரஷ்யா ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தைகளை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித் தோவல் மாஸ்கோவில் நாளை மேற்கொள்கிறார்.

ரஷ்ய உயர் அதிகாரிகளுடன் மேற்கொள்ளும் இந்த பேச்சுவார்த்தைகளின்போது எண்ணெய் இறக்குமதி, இந்தியா ரஷ்யா உச்சிமாநாடு உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்படும்.

ரஷ்யாவிலிருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்துவரும் நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இந்திய பொருட்களுக்கு 25 சதவிகிதம் கூடுதல் வரி விதித்துள்ள சூழலில் திரு.அஜித்தோவலின் ரஷ்ய பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

*********

கிரிராஜ்சிங்

நாட்டின் கைத்தறி துறையில் கரியமில வாயு வெளியேற்றத்தின் அளவீடுகள் தொடர்பான புத்தகத்தை மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங்கும் இணை அமைச்சர் பவித்ரா மார்கிரேட்டும் இன்று புதுதில்லியில் வெளியிட்டனர்.

பருத்தி போர்வைகள், தரைவிரிப்புகள், பனாரஸ் புடவைகள் உள்ளிட்ட பல்வேறு கைத்தறி உற்பத்தி பொருட்கள் தயாரிப்பது கார்பன் கரியமில வாயு வெளியேற்றத்தை அளவிடும் எளிய முறைகள் குறித்த குறிப்புகள் இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

ஜவுளி அமைச்சகமும் இந்திய தொழில்நுட்ப கல்வி கழகமும் இணைந்து இந்த புத்தகத்தை வடிவமைத்துள்ளன.

*********

முதலமைச்சர்

சமுதாயத்தின் அடித்தளமாக திகழும் இளைஞர்களின் முன்னேற்றமே மாநில அரசின் உயர் முன்னுரிமை என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று 2 ஆயிரத்து 538 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி பேசிய அவர் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் நான்முதல்வன், தமிழ் புதல்வன், புதுமை பெண் போன்ற பல்வேறு திட்டங்களால் மாணாக்கரும், இளைஞர்களும் பயன்பெறுவதாக குறிப்பிட்டார்.

கடந்த 4 ஆண்டுகளில் தேர்வாணையம் மூலம் பல்வேறு துறைகளில் 1 லட்சத்து 8 ஆயிரத்து 111 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு தொழில்நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களினால் 2 லட்சத்து 30 ஆயிரத்து 856 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் 20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு மடி கணினிகள் வழங்கப்பட உள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

வாய்ஸ்

*********

தங்கம் தென்னரசு

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி **11.19** சதவிகிதமாக அதிகரித்துள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 14 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழகம் இந்த இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டி இருப்பதாக குறிப்பிட்டார்..

தனிநபர் வருமானத்திலும் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்றார்.

இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் தமிழகம் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை எட்டும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாகவும் தமிழகம் உருவெடுத்துள்ளதாகவும் திரு.தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

*********

பெரியகருப்பன்

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் நகரங்களில் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முழுவீச்சில் செயல்படுத்தப்படுவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் 96 கோடி ரூபாய் மதிப்பிலான சுற்றுசாலை பணிகளை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர், நகர்புறங்களில் தேவையான இடங்களில் சுற்றுசாலை பணிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

இப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, தரமான சாலைகளை அமைப்பதற்கான ஆய்வுகளும் அவ்வப்போது நடைபெறுவதாக தெரிவித்தார்.

*********

சிவசங்கர்

தமிழகத்தில் ஐயாயிரம் புதிய பேருந்துகள் இயக்கப்படுவதாக போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டம் செந்துரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்குவதன் அடிப்படையில் இந்நடவடிக்கை என்றார்.

இந்தாண்டு இறுதிக்குள் பழைய பேருந்துகள் அனைத்தும் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கம் செயல்பாட்டிற்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*********

தாய்பால் வாரம்

உலக தாய்பால் வாரம் கடைபிடிக்கப்படுவதை ஒட்டி தாய்பாலின் முக்கியத்துவம் குறித்து திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல குழுமத்தின் திருச்சி செயலர் டாக்டர் எஸ்.பத்ம பிரியா எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

வாய்ஸ்

உலக தாய்ப்பால் வாரத்தை ஒட்டி ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையத்தில் அரசு மருத்துவமனை மற்றும் தனியார் செவிலியர் கல்லூரி சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது

*********

சிறப்பு முகாம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் திட்டத்தின் கீழ் வரும் 11ஆம் தேதி பல்வேறு தொழில் பிரிவுகளை சேர்ந்த பயிற்சியாளர்களுக்கான சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*********

மலைரயில்

சுதந்திர தின விடுமுறையை ஒட்டி உதகை குன்னூர் - கேத்தி இடையே சிறப்பு மலை ரயில் வரும் 15ஆம் தேதிமுதல் 3 நாட்களுக்கு இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சுற்றுலா பயணிகளின் வசதிக்காக இந்நடவடிக்கை.

*********

இருவரி

திருச்சி துவாக்குடி நகராட்சியில் மாநில அரசின் நல திட்ட முகாமை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று துவக்கிவைத்து பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்கள் பதிவுசெய்வதை பார்வையிட்டார்.

திருப்பத்தூரில் நக்சலைட் தாக்குதலால் உயிரிழந்த 4 காவலர்களின் 45ஆம் ஆண்டு வீர வணக்க நாளை ஒட்டி அவர்களின் நினைவிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாளை நடைபெற உள்ள வேளாண் கருவிகள் தொடர்பான கருத்தரங்கில் விவசாயிகள் பங்கேற்க ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் குமார் அழைப்பு விடுத்துள்ளார்.

*********

மேட்டூர்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து தற்போது வினாடிக்கு 16 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணைக்கு 7 ஆயிரத்து 591 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக 18 ஆயிரம் கன அடி தண்ணீர் விடுவிக்கப்படுகிறது.

*********

செஸ்

சென்னையில் இன்று தொடங்குவதாக இருந்த கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டிகள் எதிர்பாரா தீ விபத்து காரணமாக நாளை தொடங்குகிறது.

போட்டிக்கான புதிய அட்டவணை விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செஸ் போட்டியில் பங்கேற்கும் வீரர்களும், இதர தொழில்நுட்ப அலுவலர்களும் அருகில் உள்ள விடுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

போட்டி நடைபெறும் தளம் பாதுகாப்பாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*********